1968 மார்ச் 2]

மதுரை மாவட்டத்தில் காலரா நோய்

*127 வின.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966–67-ம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் அம்மை, காலரா நோய்வாய்ப்பட்டவர் முறையே எத்தனை பேர், தாலூக்காவாரியாக ?

(இ) அதன் காரணமாக இறந்தோர் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ)

தாலூகாவின் பெயர்.	அம்மை.	காலரா.
மதுரை	..	299
திருமங்கலம்	..	46
பழனி	..	25
மேலூர்	..	1
திருப்பரங்குன்றம்	..	11
பெரியகுளம்	5	..

(இ)

தாலூகாவின் பெயர்.	அம்மை.	காலரா.
மதுரை	..	46
திருமங்கலம்	..	7
பழனி	..	10

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் காலரா நோயால் அதிகமான பேர்கள் இறந்து போனார்கள். போதுமான தடுப்பு முறை இல்லாத காரணத்தினால்தான் அதிகமான பேர்கள் இறந்து போனார்கள். தடுப்பு முறை போதுமான அளவுக்கு ஏன் கையாளப்படவில்லை ? மதுரைக்கு, அங்கே உற்சவம் நடப்பதால் அதிகமான பேர்கள் வருகிறார்கள். ஆகவே, மதுரை நகரத்தில் காலராவைத் தடுப்பதற்கு நிரந்தர ஏற்பாடுகளை அரசாங்கம் செய்திருக்கிறதா ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : To control the incidence of cholera in Madurai District necessary public health staff has been posted wherever necessary and the population particularly at risk like slum dwellers have been covered with anticipatory anti-cholera inoculations as completely as possible. All other preventive measures were carried out intensively and the infection has been brought under control. 5,38,229 inoculations have been carried out in Madurai District and further work is in progress.

பூளவாடி மருத்துவமனை

*128 வின—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், குடிமங்கலம் யூனியன் பூளவாடியிலுள்ள ஆஸ்பத்திரியை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில் எப்பொழுது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, பூளவாடியி லுள்ள மருத்துவமனைக்கு இப்பொழுது வாரத்திற்கு இரண்டு முறை தான் மருத்துவர் வந்து செல்கிறார். அதை மாற்றி அங்கே நிரந்தரமாக பணியாற்ற ஒரு மருத்துவரை நியமிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பூளவாடி ரூரல் டிஸ்பென்சரியில் ஒரு மருத்துவர் இருந்து வந்தார். அந்த மருத்துவர் ராஜிநாமா செய்துவிட்டார். ஆகவே, பெதப்பம்பட்டி ரூரல் டிஸ் பென்சரி டாக்டர் அதையும் அடிஷனலாக கவனித்து வருகிறார். கனம் உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், குடிமங்கலம் பஞ்சாயத்து யூனியனில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : ஸார், இரண்டு தினங்களுக்கு முன்பு கேள்வி சமயத்தில் இதே கனம் அமைச்சர் அவர்கள் டாக்டர்களுக்கு ஊதியம் சரியாகத்தான் கொடுக்கப்படுகிறது, அதைப்பற்றி ஆவலாதி இல்லை என்று சொன்னார். இப்பொழுது டாக்டர் ராஜிநாமா செய்ததாகச் சொன்னார். ஊதியத்தின் அடிப்படையில் அந்த டாக்டர் ராஜிநாமா செய்தாரா அல்லது வேறு ஏதாவது காரணத்திற்காக ராஜிநாமா செய்தாரா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்ன காரணத்திற்காக ராஜிநாமா செய்தார் என்ற தகவல் என்னிடம் இல்லை. பல காரணங்களுக் காக ராஜிநாமா செய்திருக்கலாம்.

உள்ளாட்சித்துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

*129 வின.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

ஸ்தல ஸ்தாபனங்களில் வேலை பார்க்கும் எல்லா சிப்பந்திகளுக்கும் பெ ஷன் கொடுக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம்.

நகராட்சிகளிலுள்ள சில பதவிகளை மாநில அரசு பணிகளின்கீழ் கொண்டுவருவது வசதியாய் இருக்கும் பொருட்டு, 1920-ம் ஆண்டுத் தமிழக மாவட்ட நகராட்சிகள் சட்டத்தைத் திருத்துவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. அப்பதவிகள் மாநில அரசுப் பணிகளின் கீழ்க் கொண்டுவரப்படுகையில், மாநில அரசு ஊழியர்களுக்கு கிடைக்கும் ஓய் வூதியம் போன்ற சலுகைகள் அப்பதவிகளுக்கும் கிடைக்கும். இதைச் செய்து முடித்தவுடன், ஊராட்சிப் பணியாளர்கள் குறித்து அதேபோன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தச் சட்டம் திருத்துவது எப்பொழுது ? அதிலே சில்லரைப் பொறுக்கியெடுத்து அவர்களுக்கு மாத்திரம் பென்ஷன் கொடுக்கப்படுமா அல்லது எல்லோருக்கும் கொடுக்கப்படுமா ? ஸ்தலஸ்தாபனங்களில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்கு எல்லாம் பென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதிலே சிப்பந்திகளாக பணியாற்றக்கூடியவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது ஓர வஞ்சனையாகாதா ? ஆகவே, எல்லோருக்கும் இப்பொழுதிருந்தே கொடுக்கக்கூடிய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கெனவே இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்காக முன்னாலிருந்த அரசு முயற்சி எடுத்து, பிறகு என்ன காரணத்திற்காகவோ அது நிறுத்தி வைக்கப்பட்டது. இப்பொழுது இந்த அரசாங்கம் அதைப் பார்த்து, பரிசீலித்து வருகிறது. ஓர வஞ்சனை யற்ற வகையில், அனைவருக்கும் நீதி வழங்கத்தக்க வகையில் சட்டம் திருத்தப்படும்.